வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  07.11.2025 வெள்ளிக்கிழமை  இதழ் : 311  பக்கங்கள் : 08

## வாகன இறக்குமதி தடைப்பட நேரலாம்

### மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, நவ. 07
இனி வருங்காலங்களில் தொடர்ச்சியாக வாகனங்கள் இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்படலாம் என்று மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.
அத்துடன், வாகனங்கள் தொடர்ச்சியாக இறக்குமதி செய்யப்ப டுமாயின், இலங்கை ரூபாயின் பெறு மதிக்கு தாக்கம் ஏற்படக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.
மேலும், வாகன

07

### 13ஆம் திருத்த சட்டம் முழுமையாக அமுல்

# இதுவே தமது எதிர்பார்ப்பு என்று இந்தியாவில் தெரிவித்தார் சஜித்




புதுடில்லி, நவம்பர் 07

**அரசமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதே தனது எதிர்பார்ப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

**தற்போது, இந்தியாவிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்திய உலக விவகாரங்களுக்கான சபையில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

**இதனிடையே, இந்தியாவின் பிரபல ஊடகமான வியோன் நிறுவனத் துக்கு வழங்கிய நேர்காணலிலும் 13ஆம் திருத்தம் தொடர்பில் தெரிவித்துள்ளார்.**

அதில், "எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி 13ஆவது திருத்தச் சட்டத்தை நாங்கள் செயல் படுத்துவோம் என்பது எப்போதும் போல எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது. வடக்கு, கிழக்கு மட்டுமல்ல நாட்டின் அனைத்து மக்களும் 13 அமுலாக்கத்தை எதிர்பார்க்கிறார்கள். இது நமது நாட்டின் ஒன்பது மாகாணங் களையும்

07

### வித்தியா கொலை வழக்கு:

## குற்றவாளிகளின் மேன்முறையீடு நேற்றுடன் விசாரணைகள் நிறைவு

கொழும்பு, நவ. 07
புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கொலை செய்யப்பட் டமை தொடர்பில் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறை யீட்டு மனுமீதான விசாரணைகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

07

## அஜித் டோவலுடன் சஜித் நேற்று சந்தித்து பேச்சு!



புதுடில்லி, நவ. 07
இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்தார்.
புதுடில்லியில் நேற்று வியாழக்கிழமை இந்த சந்திப்பு நடைபெற்றது.

07

## தமிழ் அரசின் நிபந்தனைகள் என்னவென்று எமக்கு தெரியாது

### ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி



- த.பிரதீபன் -
யாழ்ப்பாணம், நவ. 07
தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பாக மீண்டும் ஒன்றி ணைந்து செயல்படுவதற்கு கோரிக்கை விடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால், சில நிபந்தனைகள் கூறப்பட் டுள்ளன என்று தெரிவி- க்கப் பட்டது. அவை என்ன வென்று இதுவரை தெரியாது.

07

## இரு நாட்களில் யாழ்ப்பாணத்தில் 9 பேர் கைது!

-த.பிரதீபன்-
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் போதைப்பொருட்கள் மற்றும் கூரிய ஆயுதங் களுடன் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது.

07

## சுபநேரம் பார்ப்பதை விடுத்து போராட்டத்தில் பங்கேற்கவும்

### ஐக்கிய மக்கள் சக்திக்கு நாமல் இப்படி அழைப்பு

கொழும்பு, நவ. 07
அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் 21ஆம் திகதி ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்துள்ள பேரணியில் கலந்துகொள்வோம். சுபநேரம் பார்த்துக் கொண்டிருக்காமல் பேரணியில் கலந்து கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியிடம் வலியுறுத்துகிறோம் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
சர்வாதி காரத்தை

07

## வரவு - செலவுத் திட்டம் இன்று சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, நவ. 07
2026ஆம் ஆண்டுக் கான வரவு - செலவு திட்டம் இன்று வெள் ளிக்கிழமை பாராளு மன்றத்தில் சமர்ப்பிக் கப்படவுள்ளது. இதனை, நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸநாய க்கா இன்று பிற்பகல் 1.30

07

## வரவு - செலவு திட்டம் குறித்து எதிர்க்கட்சிகள் கூடிப்பேச்சு!

கொழும்பு, நவ. 07
அநுர அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவு திட்டம் குறித்தும் இதற்கு எதிர்க்கட்சியின் மூலோபாய எதிர்வினை தொடர்பிலும் சகல எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்றைய தினம் கூடிப் பேசினர். கொழும்பிலுள்ள

07

## சஹ்ரான் குண்டு பரீட்சித்த இடம் அருகே மர்ம கிடங்கு



மட்டக்களப்பு, நவ. 07
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திர தாரியான சஹ்ரான் மோட்டார் சைக்கிளில் குண்டு ஒன்றை வைத்து பரீட்சித்த காணியின் அருகேயுள்ள காணியில் மர்மமாக கிடங்கு ஒன்று தோண்டப்பட்டுள்ளது. இது தொடர்பில், விசேட அதிரடிப் படையினர் நேற்றைய தினம் அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட் டனர் என்று அறிய வருகிறது.
மட்டக்களப்பு - தாழங்குடா பகுதியி லேயே இந்த சோதனை நடவ டிக்கை முன்னெடுக் கப்பட்டது.
இது தொடர் பில் மேலும் அறிய வருபவை

07

## நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளருக்கு பிணை

- த. பிரதீபன் -
யாழ்ப்பாணம், நவ. 07
தொல்பொருள் பகுதி யில் சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளரும் ஒப்பந்தகாரர் ஒருவரும் கைது செய்யப் பட்டு பிணையில் விடு விக்கப் பட்டனர்.
இவர்கள் யாழ்ப்பாணம்

07

## தமிழர்களை சிக்க வைக்கும் 13 குறித்து விவாதிக்காதீர்கள்

### அமெரிக்க தமிழ் புலம்பெயர்ந்தோர் அமைப்பு

நியூயோர்க், நவ. 07
இலங்கையின் கால னித்துவ கட்டமைப் புக்குள் தமிழர்களை சிக்க வைக்கும் 13ஆவது திருத்தம், கூட் டாட்சி அல்லது நிர்வாக சபைகள்

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலணை மத்திய கல்லூரியில் போக்குவரத்து விழிப்புணர்வு!



யாழ்ப்பாணம், நவ. 07

வீதி விபத்துகளை தடுப்பதற்காக வீதி விதிமுறைகள் தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

வேலணை மத்திய கல்லூரி அதிபரின் ஒத்துழைப்புடன் ஊர்காவற்றுறை வீதி போக்குவரத்து பிரிவுப் பொலிஸாரின் ஒழுங்கமைப்பில் இந்த விழிப்புணர்வு நேற்று நடத்தப்பட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரபாகரனின் பிரசன்னத்துடன் ஊர்காவற்றுறை வீதி போக்குவரத்து பிரிவு உதவி பொலிஸ் அதிகாரி சமன் குமார தலைமையில் இந்த விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பொலிஸாரால் செயன்முறைகளூடாக விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. அத்துடன், முறையற்ற போக்குவரத்து முறைகளால் ஏற்படும் அபாயங்கள் குறித்தும் மாணவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் விளக்கமளிக்கப்பட்டது. (ஐ-03-05)

# மன்னார் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அலட்சியத்துடன் பதில் வழங்கிய அதிகாரி!

## இனி வரும் கூட்டங்களில் அவர் பங்கேற்கக்கூடாதென கடிதம்

மன்னார், நவ. 07

மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு குறித்த ஓர் அதிகாரியை அனுப்பி வைக்க வேண்டாம் என வனவளத் திணைக்களத்துக்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் கடிதம் மூலம் அறிவுறுத்தல் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வன வள திணைக்களத்தின் மன்னார் மாவட்டத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர் விடுமுறை என்பதால் பதில் கடமை உத்தியோகத்தர் ஒருவர் கலந்து கொண்டார்.

இவ்வாறு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட உத்தியோகத்தர் சில கேள்விகளுக்கான பதிலை அலட்சியத்துடன் தெரிவித்ததோடு, அரச அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்களை அவமதிக்கும் வகையில் அலட்சியத்துடன் பதில் வழங்கினார்.

குறித்த உத்தியோகத்தர் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர் என்பதால் சிங்கள மொழியில் அலட்சியத்துடன் கதைத்துள்ளார்.

ஒருங்கிணைப்புக் குழு பிரதிநிதிகள் அவரின் கருத்தினால் விசனமடைந்ததோடு, அனைவரும் அவரது கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித் தனர்.

அவர் சில நிர்வாக விதிமுறையை மீறி முசலிப் பிரதேச செயலாளருக்கு எதிராக அண்மையில் ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மடு வீதி புனரமைப்பின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களை கைத்துப்பாக்கி காட்டி அச்சுறுத்தியவர் என்பதால் சபையில் இருந்து அவரை வெளியேற்றவேண்டும் எனவும் கடுமையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அரச அதிகாரியை இடை நடுவில் வெளியேற்றுகின்றமையைத் தவிர்த்து இனிவரும் நாட்களில் இந்த உத்தியோகத்தரை அனுப்பவேண்டாம் என உரிய திணைக்களத்துக்கு கடிதம் அனுப்புவதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளரான மாவட்ட செயலாளர் குறித்த கூட்டத்தில் வைத்து தெரிவித்திருந்தார்.

இதற்கமையவே சர்ச்சைக்குரிய உத்தியோகத்தரை இனி வரும் நாட்களில் இடம்பெறும் எந்தவொரு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்துக்கும் அனுப்ப வேண்டாம் என்ற கடிதத்தை மன்னார் மாவட்ட செயலாளர் வனவள திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரியவருகிறது. (அ)

# முல்லைத்தீவு விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து ஆராய்வு

## - விவசாய பிரதி அமைச்சர் தலைமையில் -

முல்லைத்தீவு, நவ. 07

முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயிகள், கால்நடை வளர்ப்போரின் தேவைகள் - பிரச்னைகள் தொடர்பில் விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ண கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தெளிவுபடுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் வனவள திணைக்களத்தால் எல்லைப்படுத்தப்பட்ட பொதுமக்களின் காணி பிரச்னை தொடர்பிலும் வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள், குளங்கள் கால்வாய்கள் புனரமைப்பு, பாதைகள் நிர்மாணிப்பு தேவைகள் தொடர்பிலும் காணி விடுவித்தல், நவீன விவசாயமுறை, தானிய உற்பத்தி, சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்ளல், மேய்ச்சல் தரையின் தேவை, நெல் கொள்வனவு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதன், மாவட்ட மேலதிக (காணி) அரசாங்க அதிபர் சி. ஜெயகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், மாவட்ட வனவள அதிகாரி, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# சட்டத்துறை மாணவர்களால் தூய்மையான சாட்டி கடற்கரை



யாழ்ப்பாணம், நவ. 07

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை மாணவர் சங்கத்தின் 20ஆவது ஆண்டு நிகழ்வையொட்டி சாட்டி கடற்கரை மாணவர்களால் சுத்தம் செய்யப்பட்டது.

20ஆவது ஆண்டு நிறைவு தினமான நேற்று முன்தினம் இந்த சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வு கடலோர சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் சமூக பொறுப்புணர்வை மேம்படுத்துவதுடன் சட்ட மாணவர்களின் பங்களிப்பையும் வலியுறுத்தியது. (ஐ-05)

# மாங்குளம் நகரை வெள்ளத்தில் மூழ்காது தடுக்க நடவடிக்கை!

முல்லைத்தீவு, நவ. 07

மாங்குளம் நகரில் வருடந்தோறும் ஏற்படும் வெள்ளப் பிரச்னையை குறைப்பதற்காக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரின் நிதி ஒதுக்கீட்டில் வடிகால் சுத்திகரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வடிகால் சுத்திகரிப்பு பணிகள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ பிரிவு, நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், சமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவகர் ஆகியோர் இணைந்து கள ஆய்வு மேற்கொண்டு நிலையான தீர்வுகளை ஆராய்ந்தனர். (ஐ)

# சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், நவ. 07

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் வைத்து கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வெளிநாட்டுக்கு செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வவுனியா - சின்னக்குளம் வீதி 'காப்பெற்'றாக மாறுகின்றது



வவுனியா, நவ. 07

வவுனியா - தோணிக்கல் - சின்னக்குளம் வீதியை காப்பெற்றாக மாற்றும் பணி நேற்று ஆரம்பமானது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் இந்தப் பணியை தொடக்கி வைத்தார்.

கிராமப்புற வீதிகளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் 8.32 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி ஒரு கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் இந்த வீதி காப்பெற்றாக மாற்றப்படுகிறது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ம. ஜெகதீஸ்வரன், திலகநாதன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் பா. பாலேந்திரன், உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-10)

# சென். மேரிஸ் அணி சம்பியன்

வடமராட்சி, நவ. 07

பரபரப்பாக நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் உடுத்துறை பாரதியை வீழ்த்தி கிண்ணம் வென்றது கட்டைக்காடு சென். மேரிஸ் அணி.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் 23 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்தியது.

இதன் இறுதிப் போட்டி பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கட்டைக்காடு சென். மேரிஸ் அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியது முதல் பரபரப்பாக நடைபெற்றது. இதில், கட்டைக்காடு சென். மேரிஸ் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தக் கோல் அணி யொலி கோல் போட்டார். (ஐ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
07.11.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கூட்டமைப்பாக இயங்குதல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குவதற்கான விருப்பத்தை இலங்கை தமிழ் அரசு கட்சி வெளியிட்டிருக்கிறது. கூட்டமைப்பில் ஏற்பட்ட விரிசலைத் தொடர்ந்து பங்காளி கட்சிகள் தற்போது தனியான கூட்டணியாக செயல்பட்டு வருகின்றன. உள்ளூராட்சித் தேர்தல் முறைமையை அடிப்படையாகக் கொண்டுதான் தேர்தலில் தனியாகப் போட்டியிடும் முடிவை இலங்கை தமிழ் அரசு கட்சியே மேற்கொண்டிருந்தது. உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்ததும் சபைகளை அமைக்கும் விடயத்தில் கூட்டமைப்பாக இயங்குவதாகக் கூறப்பட்ட போதிலும்கூட, பின்னர் விடயங்கள் அவ்வாறு நிகழவில்லை. அதேவேளை தேர்தல் மேடைகளிலும் ஒருவரையொருவர் அரசியல் எதிரிகளாக முன்னிறுத்தும் வகையிலேயே செயல்பட்டிருந்தனர்.

இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர்கூட சபைகளை அமைக்கும் விடயத்தில் தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் பிரகாசமாக இருந்தபோதிலும்கூட அது நடைபெறவில்லை. அரசியல் ரீதியில் எதிரும் புதிருமான நிலைப்பாடுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி உடன்பாட்டை எட்டியது. ஆனால், தற்போது அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்த வேண்டும் என்னும் விடயத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முன்வைத்து வரும் நிலையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்புடன் பொது வெளிகளில் முரண்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன. அடிப்படையில் ஒரு கூட்டணியாக செயல்பட முடியும் என்றால் இலங்கைத் தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும்தான் ஒரு புள்ளியில் சந்திப்பதற்கான அதிக வாய்ப்புண்டு.

தமிழ்த் தேசிய அரசியல் என்னும் பெயரில் முன்னெடுக்கப்பட்டுவரும் நகர்வுகளில் மக்களின் நலனை விடவும் கட்சிகளின் தலைவர்களின் தன்முனைப்பு வாதமும் சுயநலன்களுமே அதிகம் மேலாதிக்கம் செலுத்துகின்றன. இதன் காரணமாகவே கருத்தொருமித்த தீர்மானங்களை எட்ட முடியாமல் இருக்கிறது. இரா. சம்பந்தன் அரசியலில் இயங்கு நிலையில் இருக்கும்வரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்சிக்கல்கள் இருந்தபோதிலும்கூட பங்காளிக் கட்சிகள் வெளியில் போகும் நிலைமை ஏற்பட்டிருக்கவில்லை.

இதற்கு சம்பந்தன் அப்போது அரசியலில் வகித்த இடமும் ஒரு காரணம். அன்றைய சூழலில் சம்பந்தன் இருக்கின்ற இடத்தில் இருப்பதுதான் அனைவருக்கும் ஆதாயமான தெரிவாக இருந்தது. இதன் காரணமாகத்தான் சம்பந்தன் அரசியலை தீர்மானிக்கும் வரையில் கூட்டமைப்பு உடைவுறவில்லை. சம்பந்தன் வீட்டுக்குள் முடங்கிய பின்னர்தான் பிரச்னைகள் ஆரம்பித்தன. பிரச்னைகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மட்டுமல்ல, இலங்கை தமிழ் அரசு கட்சியையும் விட்டுவைக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் மீண்டும் கூட்டமைப்பாக இயங்குவதற்கான அழைப்பை இலங்கை தமிழ் அரசு கட்சியே வெளியிட்டிருக்கிறது. ஒப்பீட்டடிப்படையில் இலங்கை தமிழ் அரசு கட்சியே இன்றைய நிலையில் பிரதான தமிழ் கட்சி என்பதில் முரண்பட ஒன்றுமில்லை. வடக்கு - கிழக்கில் ஒரு தனியான கட்சியாக இயங்குவதற்கான ஆற்றலுள்ள கட்சியாகவும் தமிழ் அரசு கட்சியே இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் எதிர்கால அரசியல் சவால்களை கருத்தில்கொண்டு இலங்கை தமிழ் அரசு கட்சியும் அதனுடன் இணைந்து பயணிக்கக்கூடிய ஏனைய கட்சிகளும் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் இணைந்து கொள்வது அவசியமானது என்பதில் இரு வேறு கருத்தில்லை. தற்போதைய சூழலில் மூன்று அணிகளாகவே தமிழ்க் கட்சிகள் இருக்கின்றன. தமிழ் மக்களின் ஆகக்குறைந்த ஜனநாயக பலம் என்னும் நிலையில் நோக்கினாலும்கூட, முடிந்தவரையில் இரண்டு அணிகளாக இருக்க வேண்டியது அவசியம்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்."

-பிராங்க் லோயிட் றைற் (அமெரிக்க கட்டிடக் கலைஞர், எழுத்தாளர்)



# 2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் எத்தனை திட்டங்கள் நடைமுறை?

## சம்பிக்க ரணவக்க கேள்வி

கொழும்பு, நவ. 07

2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் எத்தனை விடயங்கள் செயற்படுத் தப்பட்ட என்பதை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2025 ஆம் ஆண்டு அரச வருமானத்தை அதிகரித்துவிட்டோம் என்று அரசாங்கம் குறிப்பிடுவதை தர்க்க ரீதியில் ஆராய வேண்டும். சகல துறைகளிலும் வரிகளை அதிகரித்துவிட்டு அதன் ஊடாகவே அரச வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிக்கு வந்தவுடன் சுகாதாரம் மற்றும் கல்வி, பாடசாலை உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வற் வரியை முழுமையாக இரத்துச் செய்வதாக ஜனா திபதி குறிப்பிட்டார். ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது. ஆனால் இந்த விடயம் மறக்கப்பட்டுள்ளது.

2027 மற்றும் 2028 ஆண்டுகளில் சொத்து வரியை அமுல்படுத்தவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்து செயற்திட்டங்களை பரிந்துரைத்துள்ளது. சொத்து வரிக்கு அமைவாகவே இலங்கையின் பொருளாதார சுட்டெண்ணை சர்வதேச நாணய நிதியம் தயாரித்துள்ளது.

2027 மற்றும் 2028 ஆம் ஆண்டளவில் சொத்து வரி அமுல்படுத்தப்படுமா என்பதை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையின் போது நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும் - என்றார். (அ)

## பொலிஸ் சீருடை வைத்திருந்த 2 பேர் கைது!

கொழும்பு, நவ. 07

பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட சீருடைகளைப் போன்ற சீருடைகளை வேறு தரப்பினருக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்களை மேல் மாகாண தெற்கு குற்றப்பிரிவு கைது செய்துள்ளது.

பாணந்துறை மற்றும் பண்டாரகமவைச் சேர்ந்த 38 மற்றும் 39 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டனர்.

ஹொரணை பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அனுமதியின்றி இலங்கை பொலிஸ௺ க்கு சொந்தமான சீருடைகள் மற்றும் சீருடைகளின் பகுதிகளை சட்டவிரோதமாக வைத்திருந்ததற்காக இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் நடத்திய விசாரணைகளின்போது, இந்த சந்தேக நபர்கள் குறிப்பிட்ட பொலிஸ் சீருடைகளை வேறு தரப்பினருக்கு விற்பனை செய்ததாக தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ)

## பேஸ்புக் விருந்தில் 10 பேர் கைது!

கொழும்பு, நவ. 07

கெசல்வத்த, கல்கனுவ வீதியில் பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட ஹோட்டல் விருந்தில் நடத்தப்பட்ட சோதனையின் போது ஒரு பெண் உட்பட பத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அம்பாந்தோட்டை, தெஹிவளை, பொரலஸ் கமுவ, காலி மற்றும் கல்கிஸ்ஸை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் மற்றும் கொக்கெய்ன் போதைப்பொருளை பொலிஸார் மீட்டனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு.

**மிதுனம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கடகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். மரியாதை கூடும் நாள்.

**சிம்மம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உடல் நிலை சீராகும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உறவினர்கள் நண்பர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**மகரம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புது வேலை அமையும்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

### மன்னார் காற்றாலை விவகாரம்

# 3 கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்பார் நம்பிக்கையுடன் காத்திருக்கும் மக்கள்

மன்னார், நவ. 07

மன்னாரில் காற்றாலைக்கு எதிரான எமது போராட்டத்தின் ஊடாக எமது குரலுக்குச் செவிசாய்த்த ஜனாதிபதிக்கு போராட்டக்குழு சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். எமது மூன்று கோரிக்கைகளை அவர் விரைவில் ஏற்றுக் கொள்வார் என நம்பி எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

மன்னாரில் காற்றாலைக்கு எதிராக தொடர்ச்சியாக சுழற்சி முறையில் போராட்டம் நடைபெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை 95 ஆவது நாளாக போராட்டம் நீடித்தது.

இதன்போது போராட்ட களத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் மாக்கஸ் அடிகளார் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்திருந்தார். அவருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். எதிர்வரும் காலத்தில் எந்தவிதமான காற்றாலை திட்டங்களும் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படாது என்கின்ற செய்தியை அமைச்சரவை ஊடாக தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 14 காற்றாலைக்கான வேலைத்திட்டங்கள் நிறுத்தப்படாது என்கின்ற விடயம் தெளிவாக கூறப்பட்டுள்ளது. எனவே, இப்போராட்டக்களத்தில் இருந்து நாங்கள் கூறிக்கொள்வது எமது போராட்டம் நின்று விடாது.

குறித்த 14 காற்றாலைகளும் அகற்றப்பட்டு, ஏற்கனவே அமைக்கப்பட்ட காற்றாலைகளால் ஏற்படும் பாதிப்புகள் நிவர்த்தி செய்யப்பட்டு, அதற்கான உத்தரவாதத்தை வழங்குவதன் மூலமும், மன்னார் மாவட்டத்தில் கனிய மணல் அகழ்வு இடம்பெறாது என்ற உத்தரவாதமும் வழங்கப்படுகின்ற போதே இப்போராட்டம் நிறுத்தப்படும்.

எமது போராட்டம் நூறாவது நாளை எட்டுகின்ற போது மாவட்டத்தில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. கிராமங்கள் தோறும் தீப்பந்த போராட்டமும் முன்னெடுக்கப்படும்.

நாட்டுக்காகவும், நாட்டு வளத்தை பாதுகாப்பதும், மன்னார் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் இப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

எமது மூன்று கோரிக்கைகளையும் ஜனாதிபதி விரைவில் ஏற்றுக் கொள்வார் என நம்புகின்றோம். அவரது முடிவு கிடைக்கும் வரை இப் போராட்ட களத்தில் நாங்கள் காத்திருப்போம்.

எமது கோரிக்கைகளான மன்னார் தீவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் 14 காற்றாலைகள் அகற்றப்பட வேண்டும். ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 36 காற்றாலைகளால் மன்னார் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அனைத்து பாதிப்புக்களும் உடனடியாக நிவர்த்தி செய்கிற முயற்சியில் ஈடுபடுவதாக எழுத்து மூலம் எமக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும். மன்னார் மாவட்டத்தில் எந்தவித கனிய மணல் அகழ்வுக்கும் அனுமதி வழங்க கூடாது ஆகிய மூன்று கோரிக்கைகளையும் ஜனாதிபதி ஏற்றுக் கொள்வார் என நாங்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# வட்டுக்கோட்டையில் சிவில் பாதுகாப்பு குழு கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 07

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்பு குழுவுக்கான விசேட சந்திப்பு வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த சிவில் பாதுகாப்பு குழுவானது கடந்த 5 வருடங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அது செயல்பாடற்று காணப்படுகின்றது. அதனை மீண்டும் இயங்கவைக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஒவ்வொரு செயல்திட்டமும் ஆரம்பிக்கப்படும்போது மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் கூட்டங்கள் மட்டும் நடத்தப்படுவதோடு நின்றுவிடாமல், மக்கள் கூறுகின்ற பிரச்னைகளுக்கு தீர்வுகாண பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிவில் பாதுகாப்பு குழுவினர் கோரிக்கை முன்வைத்தனர்.

ஊர்காவற்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களில் உள்ளவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (எ-05)

# இன்னுமொரு தடவை உயிரிழப்பு ஏற்படாவண்ணம் பாதுகாத்து கொள்வது அனைவரின் பொறுப்பாகும்

### சுனாமி அனர்த்த ஒத்திகை நிகழ்வில் அரசாங்க அதிபர் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், நவ. 07

2004 ஆம் ஆண்டு ஏற்பட்டது போன்று,

இன்னுமொரு தடவை உயிரிழப்பு ஏற்படாவண்ணம் பாதுகாத்து கொள்வது அனைவரின் பொறுப்பாகும் என்று

யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நாட்டின் தெரிவு செய்யப்பட்ட கரையோர மாவட்டங்களில் தேசிய சுனாமி ஒத்திகை விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சுனாமி ஒத்திகை விழிப்புணர்வு நிகழ்வில் அரசாங்க அதிபர் பிரதீபன் மேலும் கூறுகையில், சுனாமி எச்சரிக்கை மையத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஒத்திகை நிகழ்வானது தெரிவு செய்யப்பட்ட கரையோர மாவட்டங்களான காலி,



களுத்துறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படுகிறது. சுனாமி அனர்த்தம் அல்லது தாக்கம் ஏற்பட்டால் எவ்வாறு உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வது என்பதற்கான ஒத்திகையாகவும் விழிப்புணர்வாகவும் இந் நிகழ்வு அமைந்துள்ளது. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலைகள் தாக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளைப் போல், இன்னும் ஒரு தடவை உயிரிழப்புக்கள் ஏற்படாவண்ணம் உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், முப்படையினர் மற்றும் பொதுமக்கள் செயல்பட வேண்டும் என்பதற்கான நிகழ்வாக இது அமைந்துள்ளது.

அந்தவகையில் இந்த நிகழ்வில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர், சுகாதார பணிமனையினர், அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் உள்ளிட்டவர்களுக்கு நன்றியையும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5000இற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் திட்டம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, நவ. 07

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் ஏற்கவே சுமார் 2000 வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள நிலையில், எதிர்வரும் காலங்களில் மேலும் 5000 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். எனவே இவ்வாறு ஆயிரக்கணக்கில் வைத்தியர்கள் மருத்துவ சேவையிலிருந்து நீக்குவதைத் தவிர்ப்பதற்கும், சுகாதாரத்துறையிலுள்ள ஏனைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் 2026 வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் சுமார் 2000 வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். 5000 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வெளிநாடு செல்வதை தடுத்து, இலவச சுகாதார சேவையை பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

சுகாதாரத்துறையிலுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு 8 யோசனைகளை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பரிந்துரைக்கிறது. அவற்றில் பிரதானமானது விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்கள் உட்பட அனைவரையும் நாட்டில் தக்க வைத்துக் கொண்டு அவர்களது பிரச்னைகளுக்கு தீர்வை வழங்கி மக்களுக்கு உயரிய சுகாதார சேவையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் வைத்தியசாலைகள், சுகாதார நிலையங்களில் நிலவும் அத்தியாவசிய மருந்து தட்டுப்பாடுகளும் நிவர்த்தி செய்யப்படவேண்டும். மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு வழங்கப்பட்டால் மாத்திரமே வினைத்திறனான மருத்துவ சேவையை வழங்க முடியும். குறைந்த எண்ணிக்கையிலான வைத்தியர்களைக் கொண்டு சுகாதார சேவையை விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால் அது சாத்தியமற்றது. எனவே வைத்தியர்களின் பற்றாக்குறையை தீர்ப்பது குறித்தும் அரசாங்கம் அவதானம் செலுத்தவேண்டும்.

வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் பட்டப்படிப்பிற்கான ஒத்துழைப்புக்களையும் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கின்றோம். மேலும் நாட்டிலுள்ள ஆரம்ப பிரிவு சுகாதார சேவைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவேண்டும். சுகாதார அமைச்சருடன் இது குறித்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றோம். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றோம்.

கோரிக்கை விடுக்கப்பட்டு 4 மாதங்கள் கடந்தும் இதுவரை எமக்கான அழைப்பு கிடைக்கப் பெறவில்லை. கோரிக்கைகளைப் புறக்கணிக்காமல் பேச்சுவார்த்தைகள் ஊடாக பிரச்னைகளுக்கு தீர்வு காண முன்வருமாறு அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம்-என்றார்.

# வெள்ளவத்தை கற்பகம் காட்சியறை மீள திறப்பு!



கொழும்பு, நவ. 07

வெள்ளவத்தை "கற்பகம்" காட்சியறை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பால் வெள்ளவத்தை பொஸ்வெல் பிளேஸில் கடந்த செவ்வாய்க்கிழமை நவீன வசதிகளுடன் மீள திறந்து வைக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு முதல் தலைநகர் கொழும்பு, வெள்ளவத்தையில் இயங்கி வந்த "கற்பகம்" பனை சார்ந்த உற்பத்திகள் மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனை நிலையமானது கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் இயங்கும் பனை அபிவிருத்திச் சபையின் "கற்பகம்" வெள்ளவத்தை காட்சியறையை நவீன வசதிகளுடன் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காட்சியறையை திறந்து வைத்து உரையாற்றிய பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்,

வடக்கு, கிழக்கு மக்களின் கற்பகத்தருவான பனை அந்த மக்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான பல பொருட்களை அள்ளித் தருவதோடு கலாசாரம், பொருளாதாரம் மற்றும் அன்றாட வாழ்க்கையுடன் மிகவும் பின்னி பிணைந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் கூட வடக்கு கிழக்கில் சமூக பொருளாதாரத்தில் பனை முக்கிய பங்கு வகித்தது.

வெள்ளவத்தையில் மீளத் திறக்கப்பட்டுள்ள இக் காட்சியறை மூலம் தலைநகரில் வாழும் மக்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஆகியோர் வடக்கு, கிழக்கு மக்களின் பனை சார்ந்த உற்பத்திகள், பனை அபிவிருத்தி சபையின் உற்பத்தி பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவாக அமையும்-என்றார்.

பனை சார்ந்த உற்பத்தி பொருட்களை நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கு "கற்பகம்" காட்சியறைகளை விஸ்தரிக்க தீர்மானங்கள் மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட பிரதி அமைச்சர், பனை சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதன் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# தேசிய மக்கள் சக்தி பிரதேச சபை உறுப்பினரும் சகோதரனும் கைது!

கொழும்பு, நவ. 07

ஹிங்குரக்கொடை பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் ஹிங்குரக்கொட பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த உறுப்பினரின் சகோதரர் மின்சார சபையின் ஊழியர் ஒருவரின் கடமைக்கு இடையூறு விளைவித்த சம்பவத்துடன் தொடர்புடையவராக ஹிங்குரக்கொட பொலிஸாரால் முன்னதாக கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னர், குறித்த பிரதேச சபை உறுப்பினர், தமது சகோதரரை விடுவிக்குமாறு கோரி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, அங்கிருந்த அதிகாரிகளை அச்சுறுத்தினார் என கூறப்படுகின்றது.

இதனை அடுத்து பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த பிரதேச சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பிரதேச சபை உறுப்பினர், ஹிங்குரக்கொட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், தலா 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன், பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த பிரதேச சபை உறுப்பினரின் சகோதரரையும் பிணையில் விடுவிக்குமாறு ஹிங்குரக்கொட நீதவான் உத்தரவிட்டார். (அ)

# புதையல் தோண்டிய 8 பேர் கைது!

கொழும்பு, நவ. 07

ரிதிமாலியத்த - உராகொட்டுவ பகுதியில், அனுமதியின்றி புதையல் தோண்டிய 08 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் புதன்கிழமை ரிதிமாலியத்த பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள ரிதிமாலியத்த, மஹியங்கனை, அராவத்தை, ரிதிகஹா மற்றும் தெஹியத்த கண்டிய பகுதிகளை சேர்ந்த, 27 முதல் 67 வயதுக்குட்பட்டவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, ரிதிமாலியத்த பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# போதைப்பொருளுடன் பாடசாலை அதிபர் கைது

கொழும்பு, நவ. 07

அநுராதபுரம், எப்பாவல பிரதேசத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றின் அதிபர், ஒரு கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் எப்பாவல, நல்லமுதாவ வீதியில் வைத்து கைது செய்யப்பட்ட 30 வயதுடைய ஒருவரிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், அநுராதபுரம் குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, குறித்த அதிபருக்குச் சொந்தமானது எனக் கூறப்படும், எப்பாவல, அதகல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு பின்னால் புதைக்கப்பட்டிருந்த 1 கிலோ 185 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, குறித்த அதிபரால் அருகில் உள்ள ஒரு குளத்தில் வீசப்பட்டிருந்த போதைப் பொருளை அளக்கப் பயன்படுத்தப்படும் மின்னணுத் தராசு மற்றும் பொலிதீன் சீலர் இயந்திரம் ஆகியனவும் கண்டு பிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து அநுராதபுரம் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# யோஷிதவுக்கு எதிரான வழக்கு நவம்பர் 12ஆம் திகதி விசாரணை

கொழும்பு, நவ. 07

யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கை நவம்பர் 12 ஆம் திகதி விசாரணைக்கு முந்தைய மாநாட்டுக்காக அழைக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு உயர் நீதிமன்ற நீதிபதி முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின்போது வழக்கு தொடர்பான சில ஆவணங்கள் அரசு தரப்பு பிரதிவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்ட நீதிபதி, எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி இவ்வழக்கை விசாரணை முந்தைய மாநாட்டுக்காக அழைக்குமாறு உத்தரவிட்டார்.

யோஷித ராஜபக்ஷ மற்றும் டெய்சி பாரெஸ்ட் ஆகியோர் சுமார் 73 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் சொத்துக்களை சட்டவிரோதமாக சம்பாதித்ததாகவும், அதன் மூலம் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததாகவும் கூறி சட்டமா அதிபர் யோஷித ராஜபக்ஷ மற்றும் டெய்சி பொரஸ்டுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (அ)

# மாகாண சபை ஆட்சியில் மொட்டு தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும்!

கொழும்பு, நவ. 07

மாகாண சபைத் தேர்தல் நடக்கும் பட்சத்தில் பொதுஜன பெரமுன கட்சியே சபைகளில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக மாறும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்தார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதாக இருந்தால் பழைய முறைமையின் கீழ் அதனை செய்யலாம். பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அதற்குரிய சட்டத் திருத்தத்தை நிறைவேற்றலாம்.

ஆனால் தேர்தல் நடத்தப்பட்டால் தமக்கு ஏற்படும் நிலை குறித்து அரசாங்கம் அஞ்சுகின்றது.

அதனால்தான் எல்லை நிர்ணய விடயத்தைக் காண்பித்து இழுத்தடிப்பு இடம்பெறுகின்றது. பொதுஜன பெரமுன கட்சிக்கு ஜனாதிபதி தேர்தலில் 2.5 வீத வாக்குகளே கிடைக்கப்பெற்றன. அதன்பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அது 10 வீதமாக அதிகரித்தது.

எனவே, மாகாணசபைத் தேர்தல் நடைபெறும்பட்சத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் வாக்கு வங்கி அதிகரிக்கும்.

மாகாணசபைகளில் முதலமைச்சர் உட்பட ஆட்சியை தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக கட்சி மாறும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்திலிருந்து ஓடிய சிப்பாய் ஐஸ் போதைப்பொருளுடன் கைது!

## போதைப்பொருள் வியாபாரி என்று தகவல்

மட்டக்களப்பு, நவ. 07

இராணுவத்திலிருந்து விடுமுறையில் வீடு சென்று மீண்டும் கடமைக்குத் திரும்பாது இரண்டு வருடமாக தலைமறைவாகி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சிப்பாய் ஒருவர் ஏறாவூரில் 5 கிராம் 410 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட துடன் இராணுவச் சீருடை ஒன்றை மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து சம்பவ தினமான புதன்கிழமை காலை ஏறாவூர் கலைமகள் பாடசாலை வீதியில் புலனாய்வுப் பிரிவினர் மாறுவேடத்தில் கண்காணிப் பில் ஈடுபட்டு வந்தனர்.

இதன்போது ஐஸ் போதைப் பொருள் வியாபாரத்துக்கு எடுத்து கொண்டு சென்ற நிலை யில் வீதி கண்காணிப்பில் ஈடு பட்டுக் கொண்டிருந்த பொலி ஸார் குறித்த வியாபா ரியை மடக்கி பிடித்து கைது செய்தது டன் இவரிடமிருந்து 5 கிராம் 410 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளை மீட்டனர்.

குறித்த நபர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த நிலையில் விடுமுறையில் வீடு சென்று மீண்டும் கடமைக்கு திரும்பாது தலைமறைவாகி வந்ததுடன் போதைப்பொருள் வியாபா ரத்தில் ஈடுபட்டு வந்துள்ள தாகவும் ஏற்கனவே முன் குற்றம் ஐஸ் போதைப் பொருள் தொடர்பாக கைது செய்யப் பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்து நீதிமன்றில் ஆஜ ராக நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவச் சீருடையை இரா ணுவ முகாமில் வழங்காது வைத்திருந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த நபரின் வீட்டிலிருந்து இராணுவச் சீருடையை மீட்டுள்ள தாகவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு: பொகவந்தலாவையில் ஒருவர் கைது

நுவரெலியா, நவ. 07

பொகவந்தலாவ - தெரேசியாவத்த பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அவரிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொகவந்தலாவ பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தீப்பெட்டி தொழிற்சாலையில் பெரும் தீ விபத்து!

கண்டி, நவ. 07

கண்டி, பல்லேகலவில் உள்ள ஒரு தீப்பெட்டி தொழிற்சாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு பெரும் தீ விபத்து ஏற்பட் டுள்ளது.

தீப்பெட்டி தொழிற்சாலையில் தீப்பெட்டிகள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கண்டி தீயணைப்புத் துறை யைச் சேர்ந்த மூன்று தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைத்தன.

தீ விபத்துக்கான காரணம் மற்றும் ஏற்பட்ட சேதம் குறித்து பல்லேகல பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அறுகம்குடா சுற்றுலாப்பகுதியில் மதுபானம் விற்றவர் கைதானார்



பொத்துவில், நவ. 07

போயா விடுமுறை தினத்தில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சோதனை நடவடிக்கை ஒன்றை பொத்துவில் அறுகம்குடா சுற்றுலாப் பகுதியில் மேற்கொண்டனர்.

இதன்போது போயா தினத்தில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், சந்தேக நபரும் மீட்கப்பட்ட மதுபான வகைகளும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரை அறுகம்குடா சுற்றுலாப் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் வைத்து கைது செய்த பொலிஸார் ஓர் இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மதுபான வகைகளை பறிமுதல் செய்தனர்.

# “பொய் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றப்போவதில்லை”

சாய்ந்தமருது, நவ. 07

நாங்கள் பொய் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றப் போவதில்லை. கடந்த ஒரு வருட காலத்தில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நாம் செய்துள்ளோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தெரிவித்தார்.

கரைவாகுப்பற்று கிழக்கு கண்டம் மற்றும் தீவு வட்டை மேற்கு கண்டம் என்பவற்றை ஊடறுக்கும் கிடாமூலை பள்ளாற்றுக்கான புதிய பாலம் அமைக்கும் முன்னோடி ஆலோசனைக்கூட்டம் அல் அமான் சமூக நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் வொலிவேரியன் கிராமத்தில் உள்ள கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது கரைவாகு வயல் பகுதியில் உள்ள கிடாமூலை பள்ளாற்றுக்கான புதிய பாலம் அமைப்பதற்கும் இந்த பிரதேசத்தில் மேலதிக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கும் சுமார் 500 மில்லியன் ரூபாய் தேவைப்படும். கல்லோயா அபிவிருத்தி திட்டத்துக்கு 900 மில்லியன் ரூபாய் நிதியைப் பெற்றுக் கொண்ட எங்களுக்கு 500 மில்லியன் ரூபாய் பெற்றுக் கொள்வது என்பது மிகப் பெரிய விடயம் இல்லை.

900 மில்லியன் ரூபாய் செலவில் கல்லோயா அபிவிருத்தி திட்டத்தை செய்து கொண்டிருக்கிறோம். - என்றார். (எ)

# விழிப்புணர்வு வாகன பேரணி


மட்டக்களப்பு, நவ. 07

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு றொட்ரிக் கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச போலியோ தடுப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வாகனப் பேரணி நேற்று முன்தினம் நடைபெற்றது.

களுதாவளையிலிருந்து ஆரம்பமாகிய இந்த விழிப்பு ணர்வு வாகனப் பேரணி கோயில்போரதீவுவரைமுன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனை பட்டிருப்பு றொட்ரிக் கழகம், களுவாஞ்சிக்குடி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனை, போரதீவு பற்று பிரதேச சபை, பிரதேச செயலகம், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை, விளையாட்டுக் கழகங்கள், பிரதேச மட்ட பொது அமைப்புகள் என்பன இணைந்து முன்னெடுத்திருந்தன. (எ)

# ஏறாவூரில் கசிப்பு கடத்திய ஓட்டோ சாரதி ஒருவர் கைது



மட்டக்களப்பு, நவ. 07

போயா தினத்தில் ஏறாவூரில் இருந்து மட்டக்களப்பு நகருக்கு ஓட்டோவில் சூட்சுமமாக மறைத்துவைத்து, கசிப்பு கடத்திய நபர் ஒருவரை ஏறாவூர் சவுக்கடி பகுதியில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கிழக்கு மாகாண குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் சந்தேக நபரிடமிருந்து 20 லீற்றர் கசிப்பை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலில் ஏறாவூர் சவுக்கடி வீதியில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஏறாவூரில் இருந்து மட்டக்களப்பு நகருக்கு கசிப்பு கடத்திச் சென்ற ஓட்டோவை நிறுத்தி சோதனையிட்ட போது ஓட்டோவுக்குள் பொருத்தப்பட்ட ஒலிவாங்கிப் பெட்டியின் (பொக்ஸ்) உள்ளே சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 போத்தல் கசிப்பை கைப்பற்றியதுடன் ஓட்டோ சாரதியை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தவறான வாழ்க்கை முறையால் தொற்றா நோய்கள் அதிகரிப்பு

சாய்ந்தமருது, நவ. 07

தவறான வாழ்க்கை முறைகளால் சமூகத்தில் தொற்றா நோய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.

மருத்துவமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மருத்துவ பரிசோதனை முகாமில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 25 வருட மருத்துவ அனுபவத்தின் அடிப்படையில், தற்போது சாய்ந்தமருது பிரதேசத்தில் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல், இதயநோய், கிட்னி நோய், மூட்டு வலி, புற்றுநோய் போன்ற தொற்றா நோய்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன.

சமீபத்திய ஆய்வின் படி, சாய்ந்தமருது பிரதேசத்தில் வாழும் மக்களில் 79 வீதமானோருக்கு குறைந்தது ஒரு ஆபத்து காரணி காணப்படுகிறது. இதனால் மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் போதாமையாக உள்ளன.

நோய்களுக்கு சிகிச்சையளிப்பதை விட நோய் வராமல் தடுப்பதே உண்மையான தீர்வாகும். தற்போது கல்முனை பிரதேசத்தில் ஆறு டயாலிசிஸ் இரத்த சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்குகின்றன.

ஒவ்வொரு நிலையத் திலும் 80 முதல் 100 நோயாளி கள் வரை சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒரு நோயாளியின் தனியார் சிகிச்சை செலவு மாதம் 02 இலட்சம் ரூபாயாகும். இது குடும்பங்களையும் சமூக பொருளாதாரத்தையும் கடுமையாக பாதிக்கிறது.

உடற்பயிற்சி குறைவு, ஒழுங்கற்ற உணவுப் பழக்கம், அதிக உப்பு பாவித்தல் மற்றும் எண்ணெய் பாவனை, புகைபிடித்தல் போன்றவை நோய்களின் முக்கிய காரணிகளாகும். ஒரு நபர் தினமும் அதிகபட்சம் ஒரு தேக்கரண்டி உப்பு (5 கிராம்) மட்டுமே பயன்படுத்த வேண்டும். காய்கறி மற்றும் பழங்கள் போதியளவில் உணவில் சேர்க்கப்படாத நிலை பெரும்பாலான குடும்பங்களில் காணப்படுகின்றன- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன...

இறக்குமதியாளர்கள் தொடர்ச்சியாக வாகனங்கள் இறக்குமதி செய்யத் தீர்மானிக்கலாம். இதனால் இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு பெரும் தாக்கம் ஏற்படுவதோடு அரசாங்கத்தின் நடைமுறை கணக்கில் பெரும் பற்றாக்குறையும் ஏற்படும்.

பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து சுயமாக மீட்சி பெறும் இலங்கை போன்ற நாட்டுக்கு இவ்வாறான நிலைமை ஆபத்தானதாகும். வாகன இறக்குமதியால் டொலர் பெருமளவு வெளியேற்றப்படுகிறது. வெளியேற்றப்படும் டொலரை விட உள்வரும் டொலரின் அளவு குறைவாகும். இதனால், டொலரில் ஏற்படும் பற்றாக்குறையை நிவர்த்திக்க கடன் வாங்க வேண்டும். அதனால் இன்றைய சூழலில் கடன் பெற்றுக் கொள்ளவும் முடியாது. இவ்வாறான காரணங்களால் ரூபாயின் பெறுமதிக்கும் பெரும் தாக்கம் ஏற்படலாம் - என்று அரச நிதி பற்றிய குழுவிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

## வித்தியா...

இந்நிலையில், இந்த மனுமீதான தீர்ப்பு விரைவில் அறிவிக்கப் படும் என்று பிரதமநீதியரசர் ப்ரீதி பத்மன் சூரசேன தலைமையிலான ஐவரடங்கிய அமர்வு நேற்று அறிவித்தது. இந்த வழக்கு நேற்றைய தினம் இந்த அமர்வின் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

வித்தியா கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட சுவிஸ் குமார் உள்ளிட்ட குற்றவாளிகளால் இந்த மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

முன்னதாக, 2015 மார்ச் 3ஆம் திகதி, பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த, சிவலோகநாதன் வித்யா என்ற 18 வயது மாணவி கடத்தப்பட்டு கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் ட்ரயல் அட் பார் 7 பேரை குற்றவாளிகளாக இனங்கண்டு கடந்த 2017ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்தது. எனினும், தங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது என்றும் தங்களை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்து விடுதலை செய்யுமாறும் கோரி, பிரதிவாதிகள் தங்கள் சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுபநேரம்...

முன்னிலைப்படுத்தி அரசாங்கம் செயல்படும்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு சகல எதிர்க்கட்சிகளுக்கும் உண்டு. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பதவிக்கு ஏற்றாற்போல் சிறந்த எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டும். மக்களின் அடிப்படை பிரச்னைகள் பற்றி பேசுவதற்கு சுபநேரம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அரசாங்கத்துக்கு எதிரான பேரணியில் நாங்கள் கலந்துக் கொள்வோம்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விட்டு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களைப் பழிவாங்கும் நோக்கில் அரசாங்கம் செயற்படுகிறது. குறிப்பாக ராஜபக்ஷர்களை எந்த வகையில் நெருக்கடிக்கு உள்ளாக்கலாம் என்பதற்கு அரசாங்கம் அதிக காலத்தை செலவிடுகிறது.

எம்மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சட்டத்தின் முன் நிரூபிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம் - என்று நேற்று முன்தினம் தனது கட்சிப் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

## 13ஆம் திருத்த...

உள்ளடக்கியது. இது மாகாண அரசாங்கங்கள் மூலம் அரசியல், பொருளாதார மற்றும் சமூக அதிகாரமளிப்பை வழங்கியுள்ளது.

"நாட்டின் உச்ச சட்டத்தின் ஒரு பகுதியாக13 உள்ளது. அரசமைப்பின் ஒரு பகுதி செயல்படுத்தப்படுவதையும் நாம் உறுதி செய்ய வேண்டும். எனவே, எங்கள் நிலைப்பாடு குறித்து ஊகிக்க வேண்டிய அவசியமில்லை. 13ஆவது திருத்தத்தை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறோம் - நாம் அவ்வாறு கூறியுள்ளோம். எங்கள் அறிவிப்புகள் - எங்கள் பிரகடனங்கள் -நேர்காணல்கள் - மிக முக்கியமாக மக்களுடனான எங்கள் சமூக ஒப்பந்தம் மூலம் அதைச் செய்துள்ளோம். அது ஓர் அரசியல் அறிக்கை - நாம் தொடருவோம்", என்று கூறியுள்ளார். (ஐ)

## அஜித்...

இந்த சந்திப்பின்போது, கடல்சார் தொடர்புகள், திறன் விருத்தி மேம்பாடு மற்றும் நவீன, முன்னேற்றம் கண்ட தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது போலவே, தெற்காசிய நாடுகளிடையே பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை வலுப்படுத்துதல் போன்றவற்றில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டன. இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் எழும் சவால்களை எதிர்கொள்ள தகவல் பரிமாற்றம், பிராந்திய அபிவிருத்திக்கான முன்முயற்சிகள் மற்றும் நிறுவன ரீதியிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இரு தரப்பினரினரும் அவதானம் செலுத்தினர்.

பிராந்திய ஸ்திரத்தன்மை, பயனுள்ள பங்கேற்பு, அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்திக்கான இலங்கையின் வலுவான உறுதிப்பாட்டை சஜித் பிரேமதாஸ மீண்டும் வலியுறுத்தினார். பொருளாதார மற்றும் எரிசக்தி கூட்டாண்மை, அனர்த்த மீட்பு ஒருங்கிணைப்பு, தொடர்ச்சியான பலதரப்பு முன்முயற்சிகளை வலுப்படுத்துதல் தொடர்பாக கொழும்பில் நிரந்தரமான கருத்தாடல் செயலகமொன்றை நிறுவதல் போன்ற, புதிய துறைகளுக்கு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும் யோசனைகளை சந்திப்பில் எதிர்க்கட்சி தலைவர் முன்மொழிந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இரு நாட்கள்...

இந்தக் கைதுகள் கடந்த இரு நாட்களில் பல பகுதிகளில் நடத்தப்பட்ட திடீர் சோதனைளின்போது இடம்பெற்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 7 பேரும் கூரிய ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவருமாக 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அரசடி பகுதியில் ஹெரோயினுடன் நேற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைதான சந்தேகநபரிடம் இருந்து 2.25 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. அத்துடன், சந்தேகநபர் கொழும்பை சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நெடுந்தீவு

மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டிருந்தனர்.

நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை வீதி புனரமைப்பின்போது தொல்பொருள் சின்னமாக அடையாளமிடப்பட்டிருந்த பகுதி சேதமாக்கப்பட்டது. இதையடுத்து, நேற்று முன்தினம் சாரதிகள் இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக துறைசார் திணைக்களம் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இதைத் தொடர்ந்தே நேற்று நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர், ஒப்பந்தகாரர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப் பட்டபோது அவர்களை பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார். (ஐ)

## தமிழர்களை...

பற்றி விவாதிப்பதை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க தமிழ் புலம்பெயர்ந்தோர் அமைப்பு தெரிவித்துள்ளது. ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள அனைத்துத் தமிழர்களிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் உள்ள மக்களுக்கு சுயநிர்ணய உரிமை மற்றும் இறையாண்மைக்கான பிரிக்க முடியாத உரிமை உள்ளது என்பதை அங்கீகரிக்கும் ஐக்கிய நாடுகளின் 1960 காலனித்துவ நீக்கப் பிரகடனத்தின் 1514ஆவது தீர்மானத்தின் கீழ் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்.

காலனித்துவத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், தீவில் மூன்று தனித்துவமான இறையாண்மை கொண்ட இராச்சியங்கள் இருந்தன. வடக்கில் யாழ்ப்பாண தமிழ் இராச்சியம், மத்திய மலைகளில் கண்டி இராச்சியம் மற்றும் தெற்கில் கோட்டை இராச்சியம் என்பனவே அவையாகும். எனினும், தமிழர்களின் ஒப்புதல் இல்லாமல், 1833ஆம் ஆண்டில் கோல்புறூக் - கமரூன் சீர்திருத்தம் மூலம் ஆங்கிலேயர்கள் இந்த நாடுகளை வலுக்கட்டாயமாக ஒரே நிர்வாகத்தில் இணைத்தனர். இதனையடுத்து, 1948இல் பிரிட்டன் சுதந்திரம் வழங்கியபோது, அது தமிழர்களின் இறையாண்மையை புறக்கணித்து சிங்கள உயரடுக்குக்கு முழு அதிகாரத்தையும் மாற்றியது. இது, ஐக்கிய நாடுகள் 1960 காலனித்துவ நீக்கப் பிரகடனத்தில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட சுயநிர்ணயக் கொள்கையை மீறியது.

இந்த நிலையில், தமிழ் மக்கள் தங்கள் இறையாண்மையை விட்டுக்கொடுக்க ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை. அத்துடன், கொழும்பின் அரசமைப்புக்குள் தவறான சமரசங்களை ஏற்றுக் கொண்ட தலைவர்களின் வரலாற்று தவறுகளை மீண்டும் செய்ய வேண்டாம்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜி. ஜி. பொன்னம்பலம், ஏ. அமிர்தலிங்கம் போன்ற பழைய தமிழ்த் தலைவர்கள் ஈழத்தில் கூட்டாட்சி மற்றும் கொழும்பில் நிர்வாக சபைகள் பற்றி பேசி தமிழ் மக்களை ஏமாற்றினர். அந்தக் கருத்துகள் காலனித்துவ அரசமைப்புக்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை அளித்தன. மேலும் முழு இறையாண்மைக்கான அழைப்பை பலவீனப்படுத்தின - என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (ஐ)

## சஹ்ரான்...

வருமாறு,

தாழங்குடா கடற்கரை பகுதியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியான சஹ்ரான் குழுவால் மோட்டார் சைக்கிள் ஒன்றில் குண்டு வைத்து பரீட்சிக்கப்பட்டது. இவ்வாறு பரீட்சித்த காணிக்கு அருகே உள்ள தனியார் காணியை சுற்றி தகரத்தால் வேலி அமைக்கப்பட்டு அதனை அதன் உரிமையாளர் பராமரித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி தனது காணிக்கு உரிமையாளர் சென்றுள்ளார். இதன்போது, பெரும் கிடங்கு ஒன்று வெட்டப்படிருப்பதை அவதானித்த அவர் இது தொடர்பில் நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதையடுத்து, குறித்த பகுதிக்கு பொலிஸார் சென்று விசாரணை நடத்தினர். இந்த நிலையில், நேற்றைய தினம் விசேட அதிரடிப் படையினர் அங்கு சென்று நிலத்தை கம்பியால் குத்தியும் ஸ்கான் செய்தும் பரிசோதித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வரவு -...

மணிக்கு சமர்ப்பித்து உரையாற்றுவார்.

வரவு - செலவு திட்டம்மீதான விவாதம் நாளை சனிக்கிழமை தொடக்கம் 23 நாட்கள் நீடிக்கும். இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாளை சனிக்கிழமை தொடக்கம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெற்று, வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

குழு நிலை விவாதம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் டிசெம்பர் 05ஆம் திகதி வரை 17 நாட்கள் நடைபெறும். மூன்றாவது வாசிப்பின் வாக்கெடுப்பு டிசெம்பர் 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடத்தப்படும்.

வரவு - செலவு திட்ட விவாதம் முழுமையாக 23 நாட்கள் நடைபெறும். பொது விடுமுறை, ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் விவாதம் நடைபெறும். பாராளுமன்றம் திங்கட்கிழமைகளில் காலை 9.30 மணிக்கும் மற்ற நாட்களில் காலை 9 மணிக்கும் கூடும்.

இதேவேளை, வரவு - செலவு திட்டம் தொடர்பான இறுதி பரிசீலனை நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோர் இணைந்தனர்.

வரவு - செலவு திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி சபையில் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வரவு...

பிரபல விருந்தகம் ஒன்றில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

நாட்டின் பொருளாதாரம், வரவு - செலவு திட்டம் மற்றும் நாட்டின் எதிர்கால பாதை குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட விவாதத்துக்கு முன்னர், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முக்கியமான தகவல்களையும் முக்கிய பேசுபொருட்களையும் வழங்குவதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்திருந்தார். (ஐ)

## தமிழ்...

பேச்சின் மூலம் இணைய முடியும். பேசுவதற்கு முன்னர் நிபந்தனைகளை முன்வைப்பது பொருத்தமில்லை - இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் க. பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்படுவது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளோம். அதனை ஏற்றால் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்படலாம் என்ற சாரப்பட நேற்று முன்தினம் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன் கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் பின்னர் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் விதமாக நேற்றைய தினம் சுரேஷ் பிறேமச்சந்திரன் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண ஆட்சி முறைகளை விடுத்து, ஆளுநர் ஆட்சியை நடத்துவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும். மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும் எனக் கூறி வருகிறது. இதனடிப்படையில், பார்க்கும்போது அடுத்த வருடமும் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கான நிலைப்பாட்டில் அரசாங்கம் இல்லை. எல்லை நிர்ணய பணிகளை விரைவாக மேற்கொண்டு மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும் - என்றும் இதன்போது அவர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கட்டுக்கோப்பாக வாழ்ந்த எம் சமூகம் இன்று அவ்வாறான நிலையில் இல்லை!

## வடக்கு மாகாண ஆளுநர் ஆதங்கம்



யாழ்ப்பாணம், நவ. 07

கட்டுக்கோப்பாக வாழ்ந்த எமது சமூகம் இன்று அவ்வாறில்லாமல் இருக்கின்றது. சமூகத்தின் மீதான அக்கறை என்பதும் குறைந்து செல்கின்றது. ஒரு சிலர் மாத்திரமே எமது சமூகத்தை மீட்டெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் - அக்கறையுடன் செயற்படுகின்றனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்து உறவுகளும் நித்திலம் கலையகமும் இணைந்து நடத்திய கலைஞர் மதிப்பளிப்பு மற்றும் திரையிசை வெளியீடு என்பன முகமாலை சிவபுர வளாகத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை மூத்த சட்டத்தரணி சோமசுந்தரம் தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்த ஆளுநர், "மகரந்தம்" திரையிசையையும் வெளியிட்டு வைத்தார். அத்துடன் தூவானம் திரைப்படத்தில் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் ஈழத் தமிழ் ஒன்றிய கலைஞர்களையும் மதிப்பளித்தார்.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில் தெரிவித்ததாவது-

மிக நீண்ட காலத்தின் பின்னர் வித்தியாசமான நிகழ்வொன்றில் நான் பங்கேற்றிருக்கின்றேன். எமது சமூகத்தின் போக்கு தொடர்பில் அதிகம் கவலையடைந்து, அதை மாற்றுவதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற துடிப்புள்ள ஒருவராக மருத்துவர் சிவன்சுதனை எனக்கு நீண்ட காலமாகவே தெரியும்.

எமது சமூகம் எவ்வாறு கட்டுக்கோப்புடன் வாழ்ந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். புறக்காரணிகளால் அது மாற்றியமைக்கப்பட்டுள்ளதா அல்லது எமது சமூகமே அவ்வாறு மாறிவிட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. எப்படி இருந்த நாம் இப்போது எப்படி இருக்கின்றோம்.

சமூகத்தை கலையால் மீட்டெடுக்கும் முயற்சியில் மருத்துவர் சிவன்சுதன் ஈடுபட்டுள்ளது பாராட்டத்தக்கது. வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழர்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள கலைஞர்களை ஒன்றிணைத்தமை மிகப் பெரிய விடயம். எமது சமூகம் எம்மவர்களின் திறமைகளைப் பாராட்டுவது குறைவுதான். ஆனாலும், மருத்துவர் சிவன்சுதன் போன்றவர்கள் எங்கள் கலைஞர்களைப் பாராட்டுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி சிறப்பானது.

இப்போது நல்லது செய்வதற்கு கூடுதலாக எல்லோரும் யோசிக்கின்றார்கள். நல்லது செய்வதில்தான் குறைகண்டு பிடிப்பதற்கு பலர் இருக்கின்றார்கள்.

ஆனால் தவறான விடயம் தொடர்பில் எவரும் குறை கண்டு பிடிப்பதுமில்லை அதைத் தவறு என்றும் சொல்லுபவர்களும் இல்லை. விமர்சகர்களும் இப்போது மாறிவிட்டார்கள் என்றே எண்ணத்தோன்றுகின்றது-என்றார்.

# 11 மாதங்களில் நீரில் மூழ்கி 230 பேர் மரணம்!

கொழும்பு, நவ. 07

நாட்டில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நீரில் மூழ்கி 230 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் என தெரியவருகின்றது.

சிலாபம்-தெதுரு ஓயாவில் நீராடச் சென்ற 05 இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இத்துயர சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

முன்னேச்சரத்துக்கு சுற்றுலா சென்றிருந்த குழுவில் இருந்த ஐவரே உயிரிழந்துள்ளனர். இவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்த உறவினர்களாவர். (அ)

# புகையிலை, மது பயன்பாடு 200 நோய்களுக்கு காரணம்!

கொழும்பு, நவ. 07

புகையிலை மற்றும் மதுபான பயன்பாடு சுமார் 200 நோய்களுக்குக் காரணமாக அமைகிறது என புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை தெரிவித்துள்ளது.

புகையிலை மற்றும் மதுபான பயன்பாட்டைக் குறைப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையின்போது இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இதனிடையே, புகையிலை மற்றும் மதுபான பயன்பாடு காரணமாக நாளொன்றுக்கு 110 பேர் உயிரிழப்பதாக கூறப்படுகிறது.

அதேநேரம், புகையிலை பயன்பாடு உடனடியாக மக்களை கொல்லாது.

எனினும், பாதிக்கப்பட்டவர்களுக்காக பாரியளவு நிதியை செலவிட வேண்டியுள்ளது.

இதன்படி, புகையிலை பயன்பாட்டால் பாதிக்கப்படுவோருக்காக சுமார் 204 பில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# தேசிய மரபுரிமைப் பாதுகாப்புக்கு விரைவில் வருகின்றது புதிய சட்டம்

## யுனெஸ்கோ நிதி உதவி

கொழும்பு, நவ. 07

இலங்கையின் தேசிய மரபுரிமைத் தளங்களை முறையாக அடையாளம் காணுதல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுடன் புதிய சட்டங்களை வரைவு செய்யும் பணிகளை கலாசார அலுவல்கள் அமைச்சின் தேசிய மரபுரிமைப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

இந்தப் பணியை மேற்பார்வையிட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக மரபுரிமைகள், தொல்பொருள் சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டாலும், அவற்றை வகைப்படுத்த முறையான அளவுகோல்கள் இருக்கவில்லை என்று பிரிவின் மேலதிக செயலாளர் சுஜீவா பல்லியகுருக்கே குறிப்பிட்டார்.

புதிய குழுவானது மரபுரிமைகளை தொட்டுணரக் கூடிய மற்றும் தொட்டுணர முடியாத பிரிவுகளாகப் பிரிக்கவும், ஒவ்வொன்றுக்கும் தனி அளவுகோல்களை உருவாக்கவும் முடிவு செய்துள்ளது.

அத்துடன், இலங்கையின் தேசிய மரபுரிமைத் தளங்களின் உத்தியோகபூர்வ பட்டியல் இல்லாததால், தற்போது அவற்றை அடையாளம் கண்டு பெயரிடுவதில் கவனம் செலுத்தப்படுகிறது.

இதனுடன், தேசிய மரபுரிமைக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு யுனெஸ்கோ நிதி உதவி வழங்கியுள்ளதுடன், தற்போதுள்ள தொல்பொருள் சட்டத்தைத் திருத்துவது குறித்தும் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள், ஊழலை ஒழிக்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம்!

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



கொழும்பு, நவ. 07

எமது தேசத்தின் இரண்டு கொடிய சக்திகளான போதைப் பொருள் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

சிறைக்கைதிகளின் அதிகமானவர்கள் துரதிஷ்டமான சமூக பின்புலத்தில் இருந்து வந்தவர்களாகும். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் 5அல்லது 6ஆம் தரத்துக்கு பின்னர் பாடசாலை கல்வியில் இருந்து விலகியவர்களாவர் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும்-எமது அரசாங்கத் தின் கீழ் நீதி குறிப்பிட்ட ஒரு சிலரின் வரப்பிரசாதம் அல்லாமல் அனைவரதும் உரிமையாகும் என்ற ஆட்சி முறைக்கு பிரவேசித்துக்கொண்டிருக்கிறோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்பது மக்களின் அதிகாரங் களை மக்களுக்கே திருப்பிக் கொடுக்கும் அரசாங்கமா கும். மக்களிடமிருந்து எதனையும் பறித்துக்கொள்ளும் அரசாங்கம் அல்ல. அரச நிறுவனங்கள் மற்றும் சட்டம் தொடர்பில் மக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்புதல், மோசடிகளை இல்லாதொழித்தல் மற்றும் அரசாங்கத்தின் அனைத்து விடங்களும் உண்மைத்தன்மை, சாதாரணத்தன்மை மற்றும் மக்கள் ஏற்புடையதாக பிரதிபலிக்கும் என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை நாங்கள் ஏற்றுள்ளோம்-என்றார். (அ)

# நாகரிக மற்றும் தொழில்நுட்ப சக்தியாக வளர்கிறது இந்தியா!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பாராட்டு

புதுடில்லி, நவ. 07

நாகரிக மற்றும் தொழில்நுட்ப சக்தியாக இந்தியா உருவெடுப்பதை புகழ்ந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அதன் டிஜிற்றல் ஜனநாயகம், தயாரிப்புகள் மற்றும் நம்பகமான உலகளாவிய கூட்டாண்மைகளை போஷிப்பதில் கண்டு வரும் வெற்றிகள் தொடர்பிலும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ புது டில்லியில் உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சிலில் சிறப்புரை நிகழ்த்தினார்.

இதில், உலகளாவிய இராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்பில் இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் பரிணாமம் கண்டு வரும் வகிபாகத்தை பாராட்டினார்.

இதன் பிரகாரம், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமான நாகரிக மற்றும் ஜனநாயக உறவுகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியதோடு, இந்தியப் பெருங்கடலின் அமைதி மற்றும் ஒத்துழைப்புக்கான வலயமாக பாதுகாப்பதற்கான கூட்டுப் பொறுப்பையும் இங்கு சுட்டிக்காட்டினார்.

பூகோளப் பொருளாதாரத்தின் எழுச்சி மற்றும் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு முன்னுரிமைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் கட்டமைப்பு மாற்றத்தை எட்டிக் கொள்ள முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மின்சார வாகனங்கள் மற்றும் விநியோக சேவைத் துறைகளில் இந்தியாவின் தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப முன்முயற்சிகளுடன் இணைவதற்கான இலங்கையின் விருப்பத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு சுட்டிக்காட்டினார். (அ)

# கெஹலியவுக்கு எதிரான வழக்கு விசாரணை நவ. 26 இல் ஆரம்பம்

கொழும்பு, நவ. 07

தரமற்ற மருந்துகளை அரச நிதியில் கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நவம்பர் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

மூன்று நீதியரசர்கள் கொண்ட கொழும்பு உயர் நீதிமன்ற அமர்வு, நேற்று வியாழக்கிழமை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று நீதியரசர்கள் பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் திலக ரத்னபண்டார ஆகிய மூவர் அடங்கிய அமர்வின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான கபில விக்ரமநாயக்க சார்பில் ஆஜரான சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஏக்கநாயக்க, ஆவணங்களை முன் வைத்து, தனது கட்சிக்காரரை நேற்று காலை நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும் தேர்வுக்கு அனுமதிக்கக் கோரியுள்ளார்.

அந்தக் கோரிக்கையை நீதிபதிகள் அமர்வு ஏற்றுக்கொண்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org